# RAVI MATHS TUITION CENTER , WHATSAPP - 8056206308

## 10ஆம் வகுப்பு தமிழ் MLM

10th Standard

**கொள்குறி வினாக்கள்** 60 x 1 = 60

1) எந்தமிழ் நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்

(a) எந்+தமிழ்+நா (b) எம்+தமிழ்+நா (c) எந்த+தமிழ்+நா (d) எந்த+தமிழ்+நா

2) 'அன்னை மொழியே' என்னும் தமிழ்த்தாய் வாழ்த்தின் ஆசிரியர்

(a) சுந்தரனார் (b) பாரதிதாசன் (c) பெருஞ்சித்திரனார் (d) பாவாணர்

3) பெருஞ்சித்திரனாரின் பணிகளில் தமிழுக்குக் கருவூலமாய் அமைந்த நூல் எது?

(a) பாவியக்கொத்து (b) கனிச்சாறு (c) திருக்குறள் மெய்ப்பொருளுரை

(d) உலகியல் நூறு

4) வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றை குறிக்கும் பயிர் வகை ________

(a) குலை வகை (b) கொழுந்து வகை (c) மணி வகை (d) இலை வகை

5) <u>காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்</u> நிலத்திற்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது

(a) இலையும் சருகும் (b) தோகையும் சண்டும் (c) தாளும் ஓலையும்

(d) சருகும் சண்டும்

6) ‘மெத்த வணிகலன்’ என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது _________

(a) வணிகக்கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும்

(b) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

(c) ஐம்பெருங்காப்பியங்களும் அணிகலன்களும்

(d) வணிகக்கப்பல்களும் அணிகலன்களும்

7) "கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது" - தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே ___________

(a) பாடிய, கேட்டவர் (b) பாடல், பாடிய (c) கேட்டவர், பாடிய

(d) பாடல், கேட்டவர்

8) செய்தி 1 - ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15 ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
செய்தி 2 - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
செய்தி 3 - காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!

(a) செய்தி 1 மட்டும் சரி (b) செய்தி 1, 2 ஆகியன சரி (c) செய்தி 3 மட்டும் சரி

(d) செய்தி 1, 3 ஆகியன சரி

9) பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க

| | | | |
|---|---|---|---|
| அ | கொண்டல் | 1 | மேற்கு |
| ஆ | கோடை | 2 | தெற்கு |
| இ | வாடை | 3 | கிழக்கு |
| ஈ | தென்றல் | 4 | வடக்கு |

(a)

| அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |

(b)

| அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|
| 3 | 1 | 4 | 2 |

(c)

| அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|
| 4 | 3 | 2 | 1 |

(d)

| அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|
| 3 | 4 | 1 | 2 |

10) “உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்”
- பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?

(a) உருவகம், எதுகை (b) மோனை, எதுகை (c) முரண், இயைபு

(d) உவமை, எதுகை

11) 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

(a) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் (b) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்

(c) கடல்நீர் கொந்தளித்தல் (d) கடல்நீர் ஒலித்தல்

12) <u>மீசை சிரித்தார்</u> - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?

(a) பண்புத்தொகை (b) உவமைத்தொகை (c) அன்மொழித்தொகை

(d) உம்மைத்தொகை

13) பின்வருவனவற்றுள் முறையான தொடர் ___________

(a) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு

(b) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு

(c) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு

(d) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

14) விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது, புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை _____________

(a) நிலத்திற்கேற்ற விருந்து (b) இன்மையிலும் விருந்து (c) அல்லிலும் விருந்து

(d) உற்றாரின் விருந்து

15) காசிக்காண்டம் என்பது ____________

(a) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்.

(b) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

(c) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்

(d) காசி நகரத்திற்கு வழிபடுத்தும் நூல்

16) ‘சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது ___________

(a) புத்தூர் (b) மூதூர் (c) பேரூர் (d) சிற்றூர்

17) அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய தொடர்களின் பொருளை வேறுபடுத்தக் காரணமாய் அமைவது _____________

(a) வேற்றுமை உருபு (b) எழுவாய் (c) உவம உருபு (d) உரிச்சொல்

18) தலைப்புக்கும் குறிப்புக்களுக்குமான விடையைத் தேர்ந்தெடுக்க.
தலைப்பு : செயற்கை நுண்ணறிவு
குறிப்புகள் : கண்காணிப்புக்கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது. திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்துக்குச் சுருக்கமான வழியைக் காண்பிக்கிறது.

(a) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

(b) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

(c) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

(d) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

19) பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் __________

(a) துலா (b) சீலா (c) குலா (d) இலா

20) "உனதருளே பார்ப்பன் அடியேனே" - யாரிடம் யார் கூறியது?

(a) குலசேகராழ்வாரிடம் இறைவன் (b) இறைவனிடம் குலசேகராழ்வார்

(c) மருத்துவரிடம் நோயாளி

21) பரிபாடல் அடியில் விசும்பும் இசையும் என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?

(a) வானத்தையும் பாட்டையும் (b) வானத்தையும் புகழையும்

(c) வானத்தையும் பூமியையும் (d) வானத்தையும் பேரொலியையும்

22) குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார், பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம் பெற்றுள்ள வழுவமைதி முறையே ____________

(a) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி

(b) இடவழுவமைதி, மரபு வழுவமைதி

(c) பால் வழுவமைதி, திணை வழுவமைதி

(d) கால வழுவமைதி, இடவழுவமைதி

23) “மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்” என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி ___________

(a) சங்ககாலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

(b) காப்பிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

(c) பக்தி இலக்கிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

(d) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

24) அருந்துணை என்பதைப் பிரித்தால் ____________

(a) அருமை + துணை (b) அரு + துணை (c) அருமை + இணை

(d) அரு + இணை

25) 'அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை' - இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

(a) தமிழ் (b) அறிவியல் (c) கல்வி (d) இலக்கியம்

26) இடைக்காடனார் பாடலை இகழ்ந்தவன் __________
இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவன் ____________

(a) அமைச்சர், மன்னன் (b) அமைச்சர், இறைவன் (c) இறைவன், மன்னன்

(d) மன்னன், இறைவன்

27) 'இங்கு நகரப் பேருந்து நிற்குமா?' என்று வழிப்போக்கர் கேட்டது' __________ வினா.
'அதோ, அங்கே நிற்கும்' என்று மற்றொருவர் கூறியது ___________ விடை.

(a) ஐயவினா, வினா எதிர் வினாதல் (b) அறிவினா, மறைவிடை

(c) அறியாவினா, சுட்டுவிடை (d) கொளல்வினா, இனமொழிவினா

28) கரகாட்டத்தைக் 'கும்பாட்டம்' என்றும் 'குடக்கூத்து' என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?

(a) கரகாட்டம் என்றால் என்ன? (b) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?

(c) கரகாட்டத்தின் வேறு வடிவங்கள் யாவை?

(d) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

29) மலர்கள் தரையில் நழுவும். எப்போது?

(a) அள்ளி முகர்ந்தால் (b) தளரப் பிணைத்தால் (c) இறுக்கி முடிச்சிட்டால்

(d) காம்பு முரிந்தால்

30) கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

(a) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

(b) ஊரில் விளைச்சல் இல்லாததால்

(c) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் (d) அங்கு வறுமை இல்லாததால்

31) குளிர்காலத்தைப் பொழுதாய்க் கொண்ட நிலங்கள் _________ .

(a) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் (b) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

(c) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் (d) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

32) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர் - இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது?

(a) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்.

(b) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.

(c) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.

(d) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.

33) 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்.' மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே ___________

(a) திருப்பதியும் திருத்தணியும் (b) திருத்தணியும் திருப்பதியும்

(c) திருப்பதியும் திருச்செந்தூரும் (d) திருப்பரங்குன்றமும் பழனியும்

34) தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாய் ம.பொ.சி கருதியது __________ .

(a) திருக்குறள் (b) புறநானூறு (c) கம்பராமாயணம் (d) சிலப்பதிகாரம்

35) சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.

(a) உழவு, மண், ஏர், மாடு (b) மண், மாடு, ஏர், உழவு (c) உழவு, ஏர், மண், மாடு

(d) ஏர், உழவு, மாடு, மண்

36) 'தன்நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாய் இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் _________

(a) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் (b) மிகுந்த செல்வம் உடையவர்

(c) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்

(d) நெறியோடு நின்று காவல் காப்பவர்.

37) இருநாட்டு அரசர்களும் தும்பைப்பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ____________ .

(a) நாட்டைக் கைப்பற்றல் (b) ஆநிரை கவர்தல் (c) வலிமையை நிலைநாட்டல்

(d) கோட்டையை முற்றுகையிடல்

38) மேன்மை தரும் அறம் என்பது __________ .

(a) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது

(b) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

(c) புகழ் கருதி அறம் செய்வது (d) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

39) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் ________ .

(a) அதியன், சேரலாதன் (b) அதியன், பெருஞ்சாத்தன்

(c) பேகன், கிள்ளிவளவன் (d) நெடுஞ்செழியன், திருமுடிக்காரி

40) வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் - இவ்வடி குறிப்பிடுவது _______ .

(a) காலம் மாறுவதை (b) வீட்டைத் துடைப்பதை

(c) இடையறாது அறப்பணி செய்தலை (d) வண்ணம் பூசுவதை

41) காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர் ________ .

(a) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது

(b) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

(c) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்

(d) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

42) சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ___________

(a) அகவற்பா (b) வெண்பா (c) கலிப்பா (d) வஞ்சிப்பா

43) சுதந்தர இந்தியாவின் மகத்தான சாதனையும், சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது _________ .

(a) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல்

(b) பெற்ற சுதந்தரத்தைப் பேணிக்காத்தல் (c) அறிவியல் முன்னேற்றம்

(d) வெளிநாட்டு முதலீடுகள்

44) கலையின் கணவனாகவும், சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன்
- இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது _______ .

(a) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்

(b) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்

(c) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்

(d) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

45) “இவள் தலையில் எழுதியதோ கற்காலம்தான் எப்போதும்" - இவ்வடிகளில் கற்காலம் என்பது _______ .

(a) தலைவிதி (b) பழைய காலம் (c) ஏழ்மை (d) தலையில் கல் சுமப்பது

46) பூக்கையைக் குவித்துப் 'பூவே புரிவொடு காக்க' என்று ________ வேண்டினார்.

(a) கருணையன் எலிசபெத்துக்காக (b) எலிசபெத் தமக்காக

(c) கருணையன் பூக்களுக்காக (d) எலிசெபெத் பூமிக்காக

47) வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி _________

(a) உவமை (b) தற்குறிப்பேற்றம் (c) உருவகம் (d) தீவகம்

48) தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தமிழ் உணர்வை உலகெங்கும் பரப்பியவர் ________

(a) தமிழழகனார் (b) பெருஞ்சித்திரனார் (c) க. சச்சிதானந்தம் (d) பாரதியார்

49) உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல் மூள - இவ்வடியில் காணும் நயம்

(a) மோனை (b) எதுகை (c) முரண் (d) இயைபு

50) அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை _______

(a) கொம்பு (b) இணுக்கு (c) இணுக்கு (d) கவை

51) மொழிஞாயிறு எனப் போற்றப்படுபவர் ________

(a) தேவநேயப்பாவாணர் (b) தேசிகவிநாயகனார்

(c) பாவலரேறு பெருஞ்சித்திரனார் (d) இளங்குமரனார்

52) குச்சியின் பிரிவு எச்சொல்லால் அழைக்கப்படுகிறது?

(a) போத்து (b) குச்சி (c) இணுக்கு (d) சினை

53) பொருந்தாதவற்றைக் கண்டறிக.

(a) தாள் (b) தண்டு (c) கிளை (d) கோல்

54) தமிழ்வழித் திருமணங்களை நடத்தி வருபவர் யார்?

(a) தேவநேயப் பாவாணர் (b) பெருஞ்சித்திரனார் (c) இளங்குமரனார்

(d) பெருந்தேவனார்

55) 'தமிழ், ஆழி இரண்டுக்கும் பொருள்படும் படியான' - இரட்டுற மொழிதலணி அமைய பாடிய ஆசிரியர் யார்?

(a) தேவநேயப் பாவாணர் (b) பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(c) தமிழழகனார் (d) எழில் முதல்வன்

56) எடுத்துக்காட்டு உவமையணியை உரைநடையில் பயன்படுத்துகையில் அதனை எப்படி அழைப்பர்?

(a) இலக்கணை (b) இணை ஒப்பு (c) முரண்படு மெய்ம்மை (d) சொல்முரண்

57) வினையாலணையும் பெயர் தொழிலைச் செய்யும் ____________ குறிக்கும்.

(a) கருவியை (b) கருத்தாவை (c) செயப்படுபொருளை (d) பண்பை

58) பொருத்தமற்ற ஒன்றினைத் தேர்வு செய்க.

(a) ஓஒதல் (b) உறாஅர்க்கு (c) படாஅபறை (d) தம்பீஇ

59) உலகக் காற்றாலை மின்சார உற்பத்தியில் இந்தியா ______ இடம் பெற்றுள்ளது.

(a) இரண்டாம் (b) நான்காம் (c) ஐந்தாம் (d) ஆறாம்

60) மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப்பல தடைகளைத் தாண்டி வருவதால் வேகம் குறைந்து இதமாக வீசுவதால் __________ என்று அழைக்கப்படுகிறது.

(a) தென்றல் (b) கோடை (c) வாடை (d) கொண்டல்

**இலக்கணக்குறிப்பு** 17 x 1 = 17

61) வினைமுற்றை வினையாலணையும் பெயராய் மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.
(எ-டு) :
1. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.
2. ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
3. நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.

62) பகர்வனர்

63) நகரவீதி (நகரத்தின்கண் உள்ள வீதி)

64) அருங்கலம்

65) அறியா வளம்

66) மீன்வலைப் பரதவர் (மீன் வலையை உடைய பரதவர்)

67) கொல்தச்சர், செய்வினை

68) நன்கலம்

69) பயில்தொழில்

70) முகிழ்த்த

71) செந்தாமரை

72) கிடந்த தமிழ்

73) பாடுகிறோம்

74) கைதொழுது

75) தடக்கை

76) நன்னர் நன்மொழி

77) வருக

**புணர்ச்சி விதிகள்** 7 x 1 = 7

78) எந்தமிழ்

79) நற்கணக்கு

80) உள்ளுயிர்

81) முத்தமிழ்

82) கொடுங்கோல்

83) பொற்சேக்கை

84) விலங்கல்லன்

சொற்களை பொருள் அறிந்து பொருத்து 4 x 1 = 4

85) மணக் கோட்டை

86) கண்ணும் கருத்துமாக

87) அள்ளி இறைத்தல்

88) ஆறப் போடுதல்

**உறுப்பிலக்கணம்** 15 x 1 = 15

89) மயங்கிய

90) வாழ்த்துவோம்

91) காக்க
92) வழிபடுகின்றோம்
93) பொறித்த
94) நோக்கி
95) வருக
96) மலைந்து
97) எய்துவர்
98) மாளாத
99) கிளர்ந்த
100) தணிந்தது
101) பொழிந்த
102) வந்தேம்
103) தணிந்தது

**தமிழாக்கம் தருக** 10 x 1 = 10

104) எண்ணுப்பெயர்களைக் கண்டு தமிழ் எண்களில் எழுதுக.

| செய்யுள் அடி | எண்ணுப்பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை | | |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | | |
| ஐந்து சால்பு ஊன்றிய தூண் | | |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | | |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது | | |

105) தமிழில் மொழிபெயர்த்துத் தலைப்பிடுக.

106) Respected Ladies and Gentlemen, I am Ilangovan, studying 10th standard. I have come here to say a few words about our Tamil Culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammer for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamil throughout India, Srilanka, Malaysia, Singapore, England and worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture.
Thank you one and all.

107) Malar : Devi, Switch off the lights when you leave the room.
Devi : Yeah, we have save electricity.
Malar : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.
Devi : Who knows? In future our country may launch artificial moons to light our night time sky.
Malar : I have read some other countries are going to launch these types of illumination satellites near future.
Devi : Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power.

108) ஆங்கிலச்சொற்களுக்கு நிகரான தமிழ்ச்சொற்களைக் கவிதையில் கண்டு எழுதுக.

| **யாழிசை** | **It's like new lute music** |
|---|---|
| அறைக்குள்<br>யாழிசை ஏதென்று<br>சென்று எட்டிப்<br>பார்த்தேன் பேத்தி, நெட்டுருப்<br>பண்ணினாள் நீதிநூல்<br>திரட்டையே.<br>- பாரதிதாசன் | Wondering at the lute music Coming from the chamber Entered I to look up to in still My grand-daughter Learning by rote the verses Of a didactic compilation.<br>- Translated by Kavignar Desini |

109) Koothu
Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient Puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

110) Education is what remains after one has forgotten what one has learned in school. - Albert Einstein.

111) Tomorrow is often the busiest day of the week. - Spanish Proverb.

112) It is during our darkest moments that we must focus to see the light. - Aristotle

113) Success is not final, failure is not fatal. It is the courage to continue to counts. - Winston Churchill.

பிறமொழி சொற்களை காண்க 6 x 1 = 6

114) If you talk to a man in a language he understands that goes to his head. lf you talk him in his own language that goes to his heart. - Nelson Mandela

115) Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going. - Rita Mae Brown

116) **புதிர் :** உங்களிடம் ஏழு கோல்டு பிஸ்கட் உள்ளது. அவற்றுள் ஒன்று மட்டும் எடை குறைவானது. உங்களிடமுள்ள தராசை இருமுறைகள் மட்டுமே யூஸ் பண்ணி வெயிட் குறைந்த கோல்டு பிஸ்கட்டைக் கண்டுபிடிக்கவும்.

117) Among the five geographical divisions of the Tamil country in sangam literature, the Marutam region was the fit for cultivation, as it had the most fertile lands. The properity of a former depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamils.

118) மொழிபெயர்ப்பு:

Once upon a time there were two beggars in Rome. The first beggar used to cry in the streets of the city, "He is helped whom God helps". The Second beggar used to cry, "He is helped who the king helps". This was repeated by them everyday. The Emperor of Rome heard it so often that he decided to help the beggar who popularized him in the streets of Rome. He ordered a loaf of bread to be baked and filled with pieces of gold. when the beggar felt the heavy weight of the bread, he sold it to his friend as soon as he met him. The latter carried it home. When he cut the loaf of bread he found sparkling pieces of gold. Thanking God, he stopped begging from that day. But the other continued to beg through the city. Puzzled by the beggar's behaviour, the Emperor summoned him to his presence and asked him, "What have you done with the loaf of bread that I had sent you lately?" The man replied, "I sold it to my friend, because it was heavy and did not seem well baked" Then the Emperor said, "Truly he whom God helps is helped indeed," and turned the beggar out of his palace.

119) "தம்பி? எங்க நிக்கிறே?"

"நீங்க சொன்ன எடத்துலதாண்ணே!" எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது அங்ஙனக்குள்ளேயே பேப்பர் படிச்சிக்கிட்டு இரு "நா வெரசா வந்துருவேன்"

"அண்ணே! சம்முவத்தையம் கூட்டிக்கிட்டு வாங்கண்ணே அவனெப் பாத்தே ரொம்ப நாளாச்சு"

"அவம்பாட்டியோட வெளியூர் போயிருக்கான். உங்கூருக்கே அவனெக் கூட்டிக்கிட்டு வர்றேன்."

"ரொம்பச் சின்ன வயசுல பார்த்ததுண்ணே! அப்பம் அவனுக்கு மூணு வயசு இருக்கும்."

"இப்ப ஒசரமா வளர்ந்துட்டான்! ஒனக்கு அடையாளமே தெரியாது !ஊருக்கு எங்கூட வருவாம்பாரேன்! சரி, போனை வையி. நாங் கௌம்பிட்டேன்".

சரிங்கண்ணே.

கோடிட்ட இடத்தை காண்க 5 x 1 = 5

120) வானம் _______தொடங்கியது. மழைவரும் போலிருக்கிறது.

121) அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் ________.

122) _________ மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.

123) கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் ______ புல்வெளிகளில் கதிரவனின் ________ வெயில் பரவிக் கிடக்கிறது.

124) வெயிலில் அலையாதே; உடல் ________ விடும்.

**அகராதியில் பொருள் காண்க** 17 x 1 = 17

125) அடவி

126) அவல்

127) சுவல்

128) செறு

129) பழனம்

130) புறவு

131) அ) ஊண், ஊன்
ஆ) திணை, தினை.
இ) அண்ணம், அன்னம்
ஈ) வெல்லம், வெள்ளம்

132) மன்றல்

133) அடிச்சுவடு

134) அகராதி

135) தூவல்

136) மருள்

137) தால்

138) உழுவை

139) அகவுதல்

140) ஏந்தெழில்

141) அணிமை

**அகராதியில் பொருள் காண்க** 13 x 1 = 13

142) அகன்சுடர்

143) ஆர்கலி

144) கட்புள்

145) கொடுவாய்

146) திருவில்

147) மிரியல்

148) வருத்தனை

149) சணல்

150) அதசி

151) குணதரன்

152) செவ்வை

153) நகல்

154) பூட்கை

**குருவினா** 47 x 2 = 94

155) பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தமிழுணர்வை உலகெங்கும் பரப்ப காரணமாய் இருந்த இதழ்கள் யாவை?

156) வண்டு - தேன் தமிழர் - தமிழ்ச்சுவை இவற்றை ஒப்பிட்டுப் பெருஞ்சித்திரனார் குறிப்பிடும் செய்தி யாது?

157) "அன்னை மொழியே” என்ற பாடலில் அமைந்துள்ள விளிச்சொற்களை எழுதுக.

158) பதினெண் மேற்கணக்கு நூல்கள் எவை?

159) தமிழ் எவற்றின் காரணமாகத் தமக்குள் பற்றுணர்வை ஏற்படுத்துவதாகப் பெருஞ்சித்திரனார் கூறுகிறார்?

160) தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

161) 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

162) வசன கவிதை - குறிப்பு வரைக.

163) பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும் போது, அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

164) மாஅல் - பொருளும் இலக்கணக்குறிப்பும் தருக.

165) தண்ணீர்குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.

166) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

167) ‘இறடிப் பொம்மல் பெறுகுவிர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

168) ‘பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார். அவர் யார்?' ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

169) <u>நச்சப்படாதவன்</u> செல்வம் - இத்தொடரில் கோடிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.

170) வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

171) மருத்துவத்தில், மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

172) உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

173) வருகின்ற கோடைவிடுமுறையின் போது காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் காலவழுவமைதிக்கு எடுத்துக்காட்டாய் அமைவது எப்படி?

174) செய்குதம்பிப்பாவலரின் கல்விபற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

175) அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

176) இந்த அறை இருட்டாய் இருக்கிறது. மின் விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? - என்ன வினா?

177) இதோ... இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? - என்ன வினா?

178) "உறங்குகின்ற, கும்பகன்ன எழுந்திராய் எழுந்திராய்! காலதூதர் கையிலே உறங்குவாய்
உறங்குவாய்'' - கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

179) "சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள்” - இக்கவிதையடி உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

180) "உறங்குகின்ற, கும்பகன்ன எழுந்திராய் எழுந்திராய்! காலதூதர் கையிலே உறங்குவாய் உறங்குவாய்” - கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

181) காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாய் உண்ணச் சுவை மிகுந்திருக்கும். - இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள் கருப்பொருள்களை வகைப் படுத்தி எழுதுக.

182) "நேற்று நான் பார்த்த அருச்சுனன் தபசு என்னும் கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்தேன்" என்று சேகர் என்னிடம் கூறினான் - இக்கூற்றை அயற்கூற்றாய் எழுதுக.

183) பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.
பெரியகத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்.

184) தஞ்சம் எளியர் பகைக்கு - இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.

185) கரப்பிடும்பை இல்லார் - இத்தொடரின் பொருள் கூறுக.

186) வறுமையின் காரணமாய் உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்துக் குறளின் கருத்து யாது?

187) வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

188) மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

189) பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

190) புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

191) குறிப்பு வரைக - அவையம்.

192) காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

193) குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.

194) வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசையாகும். துள்ளல் ஓசை கலிப்பாவிற்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராய் இணைத்து எழுதுக.

195) நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும், அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை இரு தொடர்களாக்குக.

196) ‘வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?

197) ‘வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?

198) நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை ஒரு தொடர்களாக்குக.

199) “காய் மணியாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்” . - உவமை உணர்த்தும் கருத்து யாது?

200) தீவக அணியின் வகைகள் யாவை?

201) 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது' - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

8 x 2 = 16

202) குறிப்புகளைக்கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்கள் அமைக்க.
குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச் சுவை, மனிதகுல மேன்மை, விடுமுறைநாள்.
**(எ-டு.) :** குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?

203) குறிப்புகளைக்கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்கள் அமைக்க.
குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச் சுவை, மனிதகுல மேன்மை, விடுமுறைநாள்.
**(எ-டு) :** குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?

204) தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக..
இன்னாசிரியர் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்பவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார் - (தொடர் சொற்றொடராய் மாற்றுக.)

205) ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத்துணியை முண்டாசுபோலக் கட்டிக்கொண்டு, காலில் சலங்கை அணிந்துகொண்டு, கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர். -(தனிச்சொற்றொடர்களாய் மாற்றுக.)

206) கூத்துக்கலைஞர் பாடத் தொடங்கினார்; கூடியிருந்த மக்கள் அமைதியாயினர் - கலவைச் சொற்றொடராய் மாற்றுக.

207) ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது (தனிச்சொற்றொடர்களாய் மாற்றுக)

208) நாட்டுப்புறப்பாடலுக்கேற்ற சூழலை எழுதுக.

**பாடல் :**

பாடறியேன் படிப்பறியேன் - நான்தான் பள்ளிக்கூடம் தானறியேன்
ஏடறியேன் எழுத்தறியேன் - நான்தான் எழுத்துவகை தானறியேன்
படிக்க நல்லா தெரிஞ்சிருந்தா - நான்தான் பங்காளிய ஏன் தேடுறேன்
எழுத நல்ல தெரிஞ்சிருந்தா - நான்தான் எதிராளிய ஏன் தேடுறேன்
நாலெழுத்துப் படிச்சிருந்தா - நான்தான் நாலுதேசம் போய்வருவேன்
நாலுபக்கம் வரப்புக்குள்ளே - தெனமும் நான்பாடுறேன் தெம்மாங்குதான்.

209) மனிதனுக்கும் மலருக்குமான மணம் வீசும் இந்த நயவுரையைத் தொடர்க.

வண்டுகளை ஈர்க்கும் வாசனையில்
பூக்களிடம் வசப்படுவது மனிதர்களே!
பூச்சியைக் கவரும் வண்ணங்களில்
பூக்களிடம் விழுவது மனிதர்களே!
**..............**

***************

**இலக்கண தேர்ச்சிகொள்** 11 x 2 = 22

210) சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.

இன்சொல், எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழல் வந்தாள், மலைவாழ்வார், முத்துப்பல்
(எ-டு.) : இன்சொல் - பண்புத்தொகை
இனிமையான சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு.

211) இன்று நீங்கள் படித்த செய்தித்தாளில் உள்ள தொகாநிலைத்தொடர்களைத் தொகுத்து எழுதுக.

புயல் வீசியது - எழுவாய்த்தொடர்
அ) துரத்திய காவலர்
ஆ) பேசி அமர்ந்தார்
இ) திருடன் திருடன்
ஈ) பேச்சைக் கேட்டனர்
உ) மாநகரில் கூட்டம்

212) கீழ்க்காணும் பத்தியில் அடிக்கோடிட்ட தொடர்வகைகளை எடுத்து எழுதுக.

மாடியிலிருந்து இற<u>ங்கினார் முகமது</u>. <u>அவர் பாடகர்</u>. பாடல்களைப் <u>பாடுவதும் கேட்பதும்</u> அவருக்குப் பொழுதுபோக்கு. அவரது அறையில் <u>கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும்</u> கொண்ட குறுந்தகடுகளை <u>அடுக்கு அடுக்காக</u> வைத்திருப்பார்.

213) அடிக்கோடிட்ட சொற்களின் தொடர் வகைகளை எழுதுக.

அ) <u>பழகப் பழகப்</u> பாலும் புளிக்கும்
ஆ) <u>வடித்த கஞ்சியில்</u> சீலையை அலசினேன்
இ) மேடையில் <u>நன்றாகப் பேசினான்</u>
ஈ) <u>வந்தார்</u> அண்ணன்
உ) அரிய <u>கவிதைகளின் தொகுப்பு</u>

214) வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.

215) அட்டவணையில் விடுபட்டதை எழுதுக.

| **வேர்ச் சொல்** | **எழுவாய்த்தொடர்** | **பெயரெச்சத் தொடர்** | **வினையெச்சத் தொடர்** | **விள** |
|---|---|---|---|---|
| ஓடு | அருணா ஓடினாள் | ஓடிய அருணா | ஓடி வந்தாள் | [illegible] |
| சொல் | அம்மா சொன்னார் | 1 | சொல்லிச் சென்றார் | |
| தா | 3 | தந்த அரசர் | தந்து சென்றார் | அ |
| பார் | துளிர் பார்த்தாள் | 5 | பார்த்துச் சிரித்தாள் | |
| வா | குழந்தை வந்தது | வந்த குழந்தை | 7 | கு |

216) தொடர்களில் உள்ள எழுவாயைச் செம்மை செய்க.
கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

217) தொடர்களில் உள்ள எழுவாயைச் செம்மை செய்க.
மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

218) தொடர்களில் உள்ள எழுவாயைச் செம்மை செய்க
வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

219) தொடர்களில் உள்ள எழுவாயைச் செம்மை செய்க
கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

220) தொடர்களில் உள்ள எழுவாயைச் செம்மை செய்க
குழந்தைகள் தனித்தனியே எழுதித் தரவேண்டும்.

**கற்பவை கற்றபின்** 80 x 2 = 160

221) "நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத்தொகை”
இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் எடுத்துக்காட்டுக.

222) “எந்தமிழ்நா நின் பெருமை எடுத்தே உரைவிரிக்கும்” என்ற பாடலடியைக் கொண்டு வகுப்பறையில் ஐந்துநிமிட உரை நிகழ்த்துக.

223) பின்வரும் நிலவகைகளின் பெயர்களுக்கான காரணங்களைக் கேட்டறிந்து வகுப்பறையில் பகிர்க.

224) ஒரு பொருள் தரும் பல சொற்களைப் பட்டியலிடுக.

225) அ) காலை நேரம் ஒரு நிகழ்ச்சிக்காகத் தொடர்வண்டியில் வந்து இறங்கினார் தமிழறிஞர் கி.வா, ஜகந்நாதன். அவரை மாலையிட்டு வரவேற்றனர். அப்போது கி.வா.ஜ., “அடடே! காலையிலேயே மாலையும் வந்துவிட்டதே!” என்றார். எல்லோரும் அந்தச் சொல்லின் சிலேடைச் சிறப்பை மிகவும் சுவைத்தனர்.
ஆ) இசை விமரிசகர் சுப்புடுவின் விமரிசனங்களில் நயமான சிலேடைகள் காணப்படும். ஒரு முறை ஒரு பெரிய வித்துவானுடைய இசைநிகழ்ச்சியை விமர்சனம் செய்யும் போது அவர் குறிப்பிட்டது: “அன்று கச்சேரியில் அவருடைய காதிலும் கம்மல், குரலிலும் கம்மல்."
இ) தமிழறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதன் பல் மருத்துவத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற நண்பர் ஒருவரை அறிமுகம் செய்து வைத்தபோது "இவர் பல்துறை வித்தகர்" என்று குறிப்பிட்டார்.
இவைபோன்ற பல சிலேடைப் பேச்சுகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவற்றைத் தொகுத்துச் சொல்நயங்களைப் பதிவு செய்து கலந்துரையாடுக.

226) மொழியின் சிறப்புகளைப் பாடும் கவிதைகளுள் உங்களுக்குப் பிடித்தவற்றை வகுப்பறையில் படித்துக்காட்டுக.

227) நீங்கள் படித்தவற்றுள் நினைவில் நீங்கா இடம் பெற்ற இலக்கியத் தொடர்கள், நயங்களை எழுதுக.

228) கொடுத்த தலைப்பில் பேசுவோம்.

**தலைப்பு :** நேரம்

**தவிர்க்க வேண்டிய சொல் :** கடிகாரம்

**குறிப்பு :** ஒரு நிமிடம் பேச வேண்டும். தமிழ்ச்சொற்களை மட்டும் பயன்படுக்க வேண்டும். ஐந்து வினாடிகளுக்கு மேல் இடைவெளி இருத்தல் கூடாது.

**இது போன்று வேறு வேறு தலைப்புகளில் வகுப்பறையில் பேசிப் பழகுக.**

229) தேன், நூல், பை, மலர், வா - இத் தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழிகளாக்குக.

230) வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.

231) தனிமொழி, தொடர்மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.

232) மலை என்னை அடிக்கடி அழைக்கும், மலை மீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும்.

233) கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, பாடுதல் - இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக

234) காற்று பேசியதைப் போல நிலம் பேசுவதாக எண்ணிக் கொண்டு பேசுக.

235) 17ஆம் நூற்றாண்டில் வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு இன்றும் உலக விந்தையாகத் திகழும் தாஜ்மகால், இன்றளவில் மஞ்சள், பழுப்பு என நிறம் மாறிக் காட்சியளிப்பதன் காரணங்களையும் தீர்வுகளையும் கலந்துரையாடுக.

236) இவ்வசன கவிதையில் இடம் பெற்றுள்ள வேண்டுகோள் சொற்களும் கட்டளைச் சொற்களும் (வாசனையுடன் வா, அவித்து விடாதே...) கவிதையின் உட்பொருளை வெளிப்படுத்தத் துணை நிற்பது குறித்துப் பேசுக.

237) திக்குகள் எட்டும் சிதறி - தக்கத்
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட
பக்க மலைகள் உடைந்து வெள்ளம்
பாயுது பாயுது பாயுது - தாம்தரிகிட
தக்கத் ததிங்கிட தித்தோம் - அண்டம்
சாயுது சாயுது சாயுது - பேய் கொண்டு
தக்கை யடிக்குது காற்று - தக்கத்
தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட
-பாரதியார்

இது போன்ற இயற்கையொலிகளை உணர்வுடன் வெளிப்படுத்தும் கவிதைகளைத் திரட்டி வந்து வகுப்பறையில் படித்துக் காட்டு.

238) முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலை உணர முடிகிறதா? உங்களின் கருத்துகளைப் பதிவு செய்க.

239) குறிப்புகளைக் கொண்டு ஆர்வமூட்டும் வகையில் கதை / நிகழ்வை எழுது.
அமைதி - வனம் - மனத்தைத் தொட்டது - கொஞ்சம் அச்சம் - ஆனால் பிடித்திருந்தது - இரவில் வீட்டின் அமைதியைவிட - வனத்தின் அமைதி - புதுமை - கால்கள் தரையில் - இலைகளின் சலசலப்பு - பறவைகள் மரங்களின் மேல் - சிறகடிப்பு - அருகில் திரும்பியவுடன் - திடீரென ஆரவார ஓசை - தண்ணீரின் ஓட்டம் - அழகான ஆறு - உருண்ட சிறு கூழாங்கற்கள் - இயற்கையின் கண்காட்சி.

240) கடலில் புயலின் தாக்கத்தினால் ஏற்பட்ட பதற்றத்தை வெளிப்படுத்த அடுக்குத் தொடர்களும் வருணனைகளும் எவ்வாறெல்லாம் பயன்பட்டுள்ளன என்பது குறித்து வகுப்பில் பேசுக.

241) நீங்கள் எதிர்கொண்ட இயற்கை இடர் குறித்து விவரித்து எழுதுக. (மழை, வெள்ளம், புயல், வறட்சி)

242) வண்ணமிட்ட தொகைநிலைத் தொடர்களை வகைப்படுத்துக.

243) வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை, பசித்தவர்க்கு உணவிடல் இவை போன்ற செயல்கள் குறித்து உங்கள் வீட்டிலுள்ளவர்களிடம் கேட்டுத் தெரிந்து வந்து கலந்துரையாடல் செய்க.

244) "இட்டதோர் தாமரைப்பூ
இதழ்விரித் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண்ணும்....... -பாரதிதாசனார்

இவ்வாறாகக் கவிதைகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பகிர்ந்துண்ணல் குறித்துப் பேசுக.

245) நெடுநாளாகப் பார்க்க எண்ணியிருந்த உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் உங்கள் வீட்டிற்கு வருகிறார். நீங்கள் அவரை எதிர்கொண்டு விருந்து அளித்த நிகழ்வினை விரிவாக ஒரு பத்தியளவில் எழுதிப் படித்துக் காட்டுக.

246) உணவு, விருந்து குறித்த பழமொழிகளைத் திரட்டி அவை சார்ந்த நிகழ்வுகளை எடுத்துரைக்க.

247) பத்தியைப் படித்து வார இதழ் ஒன்றிற்கு அனுப்பும் வகையில் சமையல் குறிப்பாக மாற்றுக.

248) பசித்தவருக்கு உணவிடுதல் என்ற அறச்செயலையும் விருந்தினருக்கு உணவிடுதல் என்ற பண்பாட்டுச் செயலையும் ஒப்பிட்டு பேசுக.

249) உங்கள் கற்பனையை இணைத்து நிகழ்வைக் கதையாக்குக.

அப்பாவுக்கும், அம்மாவுக்கும் இடையே சின்னஞ்சிறு சச்சரவுகள் ஏற்பட்டு, இரண்டு பேருமே முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு ஆளுக்கொரு மூலையில் உட்கார்ந்திருக்கும் போது, விருந்தினர் வருகை அவர்களை அன்பான கணவன் மனைவியாக மாற்றிவிடும் அம்மாவின் கெடுபிடியும் அப்பாவின் கீழ்ப்படிதலும் ஆச்சரியமாக இருக்கும். விருந்தாளிகள் அடிக்கடி வரமாட்டார்களா என்று இருக்கும்.

**விருந்தினர் தினம் என்பது எப்படி விடியும் தெரியுமா?**

காலையிலிருந்தே வீட்டிற்குள்ளிருந்து வாசலுக்கு வந்து வந்து எட்டிப் பார்த்துச் செல்வாள் அம்மா. திண்ணையில் பேப்பர் பார்த்துக் கொண்டிருக்கும் அப்பா கேட்பார். “என்ன விஷயம், இன்னிக்கு யாராவது விருந்தாளி வரப்போராங்களா என்ன?”. "ஏங்க..... காலையிலேருந்து வேப்ப மரத்துல காக்கா விடாம கத்திக்கிட்டே இருக்கே பார்க்கலியா? நிச்சயம் யாரோ விருந்தாளி வரப்போறாங்க பாருங்க." "அடடே, ஆமாம் காக்கா கத்துது யாரு வரப்போறா? இது பலாப்பழ சீசன் ஆச்சே.... உன் தம்பிதான் வருவான், பலாப்பழத்தைத் தூக்கிட்டு" - நாங்கள் ஓடிப்போய் தெருவில் பார்ப்போம். அப்பா சொன்னது சரி, காக்கா கத்தியதும் சரி. தூரத்தில் தெருமுனையில் அறந்தாங்கி மாமா தலையில் பலாப்பழத்துடன் வந்து கொண்டிருந்தார். அம்மாவுக்குக் காக்கை மொழி தெரியும். - தஞ்சாவூர்க் கவிராயர்

250) இன்றைய செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடுகளைச் செய்தித்தாளிலோ இணையத்திலோ கண்டு அட்டவணையாகத் தருக.

251) தமிழர் மருத்துவ முறைக்கும், நவீன மருத்துவ முறைக்கும் உள்ள தொடர்பு குறித்து ஒப்படைவு உருவாக்குக .

252) கருத்துளை சார்ந்த செய்தியை அறிவியல் இதழ் ஒன்றிற்குக் குறுங்கட்டுரையாக எழுதுக.

253) “அறிவைவிட மிகவும் முக்கியமானது கற்பனைத் திறன். ஏனெனில் அறிவு என்பது நாம் தற்போது அறிந்தும் புரிந்தும் வைத்திருப்பவற்றோடு முடிந்து விடுகிறது. கற்பனைத் திறனோ இந்த ஒட்டு மொத்தப் பேரண்டத்தையும் அளப்பது. இன்று நாம் அறிந்திருப்பதை மட்டுமன்று; இனி நாம் அறிந்து கொள்ளப் போவதையும் உள்ளடக்கியது” - ஐன்ஸ்டைன், “வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் வெற்றிக்கான வழி அதில் இருக்கவே செய்கிறது. நிச்சயம் என் ஆராய்ச்சியில் நான் வெல்வேன். அதன்மூலம் மனித இனம் தொடர வழி வகுப்பேன்” - ஸ்டீபன் ஹாக்கிங்.
இவ்விருவரின் கூற்றுகளைப் பாடப்பகுதி உணர்த்தும் கருத்துகளோடு ஒப்பிட்டு உரையாடுக.

254) கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.
அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார்.

255) கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.
"இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால் அதை அனைவரும் ஏற்பர்” என்று கூறினான்.

256) கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.
சிறிய வயதில் இந்த மரத்தில்தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம்.

257) கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.
செல்வன் இளவேலன் இந்தச் சிறுவயதிலேயே விளையாட்டுத்துறையில் சாதனை புரிந்திருக்கிறார்.

258) அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக
தந்தை, " மகனே ! நாளை உன்னுடைய தோழன் அழகனை அழைத்து வா ?” என்று சொன்னார். (ஆண்பாற் பெயர்களைப் பெண்பாலாக மாற்றித் தொடரை எழுதுக)

259) அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக
அக்கா நேற்று வீட்டுக்கு வந்தது. அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. (வழுவை வழாநிலையாக மாற்றுக)

260) அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக
"இதோ முடித்துவிடுவேன்” என்று செயலை முடிக்கும்முன்பே கூறினார். (வழாநிலையை வழுவமைதியாக மாற்றுக)

261) அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக
அவன் உன்னிடமும் என்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை. (படர்க்கையை முன்னிலையாக, முன்னிலையைத் தன்மையாக, தன்மையைப் படர்க்கையாக மாற்றுக)

262) பரிபாடல் இசைப்பாடல் ஆகும் . பாடப்பகுதியின் பாடலை இசையுடன் பாடி மகிழ்க.

263) மொழி பெயர்ப்புச் சிறுகதை ஒன்றைப் படித்து அதன் கதைச் சுருக்கத்தையும் உங்கள் கருத்துக்களையும் வகுப்பறையில் கூறுக.

264) தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட தாகூரின் கீதாஞ்சலிப்பாடல் ஒன்றையும், கல்லீல் கிப்ரானின் கவிதை ஒன்றன் மொழிபெயர்ப்பையும் நூலகத்தில் படித்து எழுதி வருக.

265) எதிர்காலத்தில் நீங்கள் பயில விரும்பும் கல்வி குறித்து வகுப்பறையில் கலந்துரையாடிக் குறிப்புரை உருவாக்குக.

266) இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலத்தை நாடகமாக்கி வகுப்பில் நடித்துக் காட்டுக.

267) கல்வி வாய்ப்பற்ற சூழலில் ஒற்றைச் சுடராக வந்து ஒளியேற்றினார மேரி மெக்லியோட் பெத்யூன், அதுபோலத் தமிழகத்தில் கல்வி வாய்ப்பற்றவர்களின் வாழ்வில் முதற்சுடர் ஏற்றியர்களுள் யாரேனும் ஒருவர் குறித்த செய்திகளைத் தொகுத்துச் சில படங்களுடன் குறும்புத்தகம் ஒன்றைக் குழுவாக உருவாக்குக.

268) கல்விக் கண் திறந்தவர்களுக்கிடையில் கைவிடப்பட்ட பெண்களுக்காக உழைத்த தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலெட்சுமி பற்றிய ஒரு தொகுப்பேட்டினை உருவாக்கி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

269) வினா வகைகளையும் விடை வகையையும் சுட்டுக

1. "காமராசர் நகர் எங்கே இருக்கிறது?"
2. "இந்த வழியாகச் செல்லுங்கள் "
3. "எனக்கு எழுதித் தருகிறாயா?"
4. "எனக்கு யார் எழுதித் தருவார்கள்"

270) உரையாடலில் இடம்பெற்றுள்ள வினா விடை வகைகளைக் கண்டு எழுதுக.

பாமகள் : வணக்கம் ஆதிரை! ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே
ஆதிரை : ஆமாம்! கவியரங்கத்துக்குக் கவிதை எழுதிக்கொண்டிருக்கிறேன்
பாமகள் : அப்படியா! என்ன தலைப்பு?
ஆதிரை : கல்வியில் சிறக்கும் தமிழர்!
நீங்கள் கவியரங்கத்துக்கு எல்லாம் வருவீர்களோ? மாட்டீர்களோ?
பாமகள் : ஏன் வராமல் இருப்பேனா?

271) நீங்கள் வாழும் பகுதியிலுள்ள நிகழ்கலைக் கலைஞர்களை நேர்முகம் கண்டு, அவற்றைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.

272) ஒவ்வொரு நாளும் நீங்கள் பார்க்கும் காட்சிகளில் / எதிர்கொள்ளும் நிகழ்வுகளில் கண்டுணரும் அழகை மூன்று நிமிடங்கள் சொற்களில் விவரிக்க.

273) சந்தநயமிக்க குழந்தைப் பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து, வகுப்பறையில் பாடி மகிழ்க.

274) கம்பராமாயணக் கதைமாந்தர்களுள் எவரேனும் ஒருவர் குறித்து வகுப்பில் உரையாற்றுக.

275) மேடைக் கலைஞர்களும் பகல் வேடக்கலைஞர்களும் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் குறித்து வகுப்பறையில் விவாதிக்க.

276) பண்டைத் தமிழரின் திணைநிலை வாழ்க்கை முறையையும் இன்றைய தமிழரின் வாழ்க்கை முறையையும் ஒப்பிட்டு ஒவ்வொருவர் கருத்தையும் பதிவு செய்து பொதுக் கருத்தை அறிக.

277) எவரேனும் ஓர் அறிஞர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் உங்களைக் கவர்ந்த ஒன்றை அவரே சொல்வதைப் போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக.

278) நீங்கள் படித்துச் சுவைத்த வரலாற்றுக் கதைகள் பற்றி வகுப்பறையில் உரை நிகழ்த்துக.

279) "முதல் மழை விழுந்தது" தொடர்ந்து நிகழும் உழவுச் செயல்களை ஏர்புதிதா கவிதை கொண்டு வரிசைப்படுத்திப் பேசுக.

280) உங்கள் ஊரில் உள்ள பண்டைய வரலாற்றுச் சின்னங்களின் ஒளிப்படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பேடு ஒன்றை உருவாக்குக.

281) சிலப்பதிகாரக் கதைச் சுருக்கத்தை அறிந்துவந்து வகுப்பறையில் கூறுக.

282) சிலப்பதிகாரம் காட்டும் மருவூர்ப்பாக்கம் பற்றிய விவரிப்பை இன்றைய கடைத் தெருவுடன் ஒப்பிட்டு உரையாடுக.

283) உங்கள் ஊரில் கடின உழைப்பாளர் - சிறப்புமிக்கவர் - போற்றத்தக்கவர் - என்ற நிலைகளில் நீங்கள் கருதுகின்ற பெண்கள் தொடர்பான செய்திகளைத் தொகுத்து வழங்குக.

284) பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள அறக்கருத்துகளை வலியுறுத்தும் சங்க இலக்கியப் பாடலடிகள் ஐந்தளைத் தொகுத்து, அவை கூறும் அறச்செய்திகளை எழுதுக.

285) 'கொன்றை வேந்தன்' முதலான பிற்கால அறநூல்களின் பெயர்களை அறிந்து, அவற்றுள் ஏதேனும் ஒரு நூலின் அறக்கருத்துகளை எடுத்துக்கொண்டு, அவை இன்றும் பொருந்தி நிற்பது குறித்துக் கலந்துரையாடுக.

286) துளிப்பா ஒன்றனைத் தேர்ந்தெடுத்து, அதில் வெளிப்படும் கருத்தினைப்பற்றி வகுப்பறையில் இரண்டு நிமிடம் உரை நிகழ்த்துக.

287) திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் தலைப்பினை எழுதி, அகர வரிசைப்படுத்தி அதன் பொருளினை எழுதுக.

288) கவிதைகளை ஒப்பிட்டுக் கருத்துரைக்க.

**கவிச்சக்கரவர்த்தியும் கவியரசும்**

நதியின் பிழையன்று
நறும்புன லின்மை அன்றே
பதியின் பிழையன்று
பயந்த நம்மைப் புரந்தான்
மதியின் பிழையன்று
மகன்பிழை யன்று மைந்த
விதியின் பிழைநீ
இதற்கென்னை வெகுண்ட தென்றான் **- கம்பன்**
நதிவெள்ளம் காய்ந்துவிட்டால்
நதிசெய்த குற்றம் இல்லை
விதிசெய்த குற்றம் இன்றி
வேறு யாரம்மா! - **கண்ணதாசன்**

289) கருத்துகளை உரைநடையாய்ப் படிப்பதிலும், நாடகமாய்ப் படிப்பதிலும் நீங்கள் உணரும் வேறுபாடுகள் குறித்துக் கலந்துரையாடுக.

290) இராமானுசர் நாடகம் வெளிப்படுத்துவது போன்று இராமானுசர் வாழ்க்கை நிகழ்வுகள் சிலவற்றைத் தொகுத்து, அவை குறித்த உங்களின் கருத்துகளை எடுத்துரைக்க.

291) பாடநூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளையும் அவற்றின் பாவகைகளையும் வகைப்படுத்தி பட்டியல் இடுக.

292) வெண்பாவில் அமைந்த நூல்கள், ஆசிரியப்பாவில் அமைந்த இலக்கியங்கள் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக.

293) வகுப்பு மாணவர்களின் படைப்புகளைத் திரட்டிக் குழுவாய் இணைந்து கையெழுத்து இதழ் ஒன்றை உருவாக்குக.

294) மனிதநேயத்தை வெளிப்படுத்தும் புதுக்கவிதைகளைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக
மனிதனையும் விலங்கினையும்
வேறுபடுத்துவது மனித நேயம்தான்
ஆகையால் மனிதனே! என்றும்
மனித நேயத்தைப் போற்றுவோம்!
பல்பொருள் அங்காடியில்
பல்வேறு இளைஞர்கள்

295) வீரமாமுனிவர் தமிழகத்தில் தங்கிப் பணி செய்த இடங்களைப் பற்றியும் அங்கு அவர் ஆற்றிய தமிழ்ப் பணிகளைப் பற்றியும் நூலகத்திற்குச் சென்று செய்திகளைத் திரட்டுக.

296) கண்ணதாசனின் இயேசு காவியத்தில் மலைப் பொழிவுப் பகுதியைப் படித்து அதில் வரும் அறக் கருத்துகளை எழுதுக.

297) சமூகத் தொண்டு செய்து உயர்ந்த விருதுகளைப் பெற்ற ஆளுமைகளைப் பட்டியலிட்டு அவர்கள் செய்த சமூகப்பணி குறித்துக் கலந்துரையாடுக.

298) “அகநக நட்பதே நட்பு" - என்ற தலைப்பில் நண்பர்களுக்கு உதவிய சூழல்களைச் சுவைபட எழுதுக.

299) முன் வகுப்பில் கற்ற அணிகளை எடுத்துக்காட்டுகளுடன் ஒப்படைவு ஒன்று உருவாக்குக.

300) பாடப்பகுதியில் உள்ள திருக்குறளில் பயின்று வரும் அணிகளைக் கண்டறிந்து வகுப்பறையில் விளக்குக.

**பிழைகளை நீக்கி எழுது** 4 x 2 = 8

301) **தொடர்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பதிலாய் அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.**
வள்ளல் குமணன் வறுமையால் வாடிவந்த புலவனுக்குத் தனது தலையைக் கொடுத்து மங்காப் புகழ் பெற்றான்.

302) **தொடர்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பதிலாய் அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.**
உலகில் வாழும் மக்களில் சிலர் கனியிருக்கக் காய் புசித்தலைப் போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசி இன்னற்படுகின்றனர்.

303) **தொடர்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பதிலாய் அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.**
சோலையிற்பூத்த மணமலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மது உண்டன.

304) **தொடர்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பதிலாய் அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.**
பசுப்போலச் சாந்தமும் புலிபோல் தீரமும் யானைபோல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

**பிழைகளை நீக்கி எழுது** 1 x 2 = 2

305) “தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே”

**சொல்லை கண்டுபிடித்து புதிரை விடுவி** 1 x 2 = 2

306) (காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்)
1. முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும்: நீக்காவிட்டாலும் வாசனை தரும்.
2. பழமைக்கு எதிரானது; எழுதுகோலில் பயன்படும்.
3. இருக்கும் போது உருவமில்லை; இல்லாமல் உயிரினம் இல்லை.
4. நாலெழுத்தில் கண் சிமிட்டும்; கடையிரண்டில் நீந்திச் செல்லும்.
5. ஓரெழுத்தில் சோலை; இரண்டெழுத்தில் வனம்.

கலைச்சொல் அறிவோம் 46 x 2 = 92

307) Vowel

308) consonant

309) Homograph

310) Monolingual

311) Conversation

312) Discussion

313) Storm

314) Tempest

315) Sea Breeze

316) Tornado

317) Land Breeze
318) Whirlwind
319) செவ்விலக்கியம்
320) காப்பிய இலக்கியம்
321) பக்தி இலக்கியம்
322) பண்டைய இலக்கியம்
323) வட்டார இலக்கியம்
324) நாட்டுப்புற இலக்கியம்
325) நவீன இலக்கியம்
326) Nanotechnology
327) Biotechnology
328) Ultroviolet rays
329) Space Technology
330) Cosmic rays
331) Infrared rays
332) Emblem
333) Intellectual
334) Thesis
335) Symbolism
336) Aesthetics
337) Terminology
338) Artifacts
339) Myth
340) Consulate
341) Guild
342) Patent
343) Irrigation
344) Document
345) Territory
346) Belief
347) Philosopher
348) Renaissance
349) HUMANISM
350) CULTURAL BOUNDARIES
351) CABINET
352) CULTURAL VALVES

**இரு சொற்களை ஒரே தொடரில் எழுது** 12 x 2 = 24

353) சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.
தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ.
**(எ-டு):** பூமணி
354) மடு -மாடு
355) மலை - மாலை

356) வளி - வாளி
357) விடு - வீடு
358) தொடு - தோடு
359) இயற்கை - செயற்கை
360) கொடு - கோடு
361) கொள் - கோள்
362) சிறு - சீறு
363) தான் - தாம்
364) விதி - வீதி

**பழமொழிகளை நிறைவு செய்** 5 x 2 = 10

365) உப்பில்லாப் _______________
366) ஒரு பானை __________
367) உப்பிட்டவரை _________
368) விருந்தும் ___________
369) அளவுக்கு ___________

உவமையை பயன்படுத்தி சொற்றொடர் உருவாக்கு 4 x 2 = 8

370) தாமரை இலை நீர்போல
371) மழைமுகம் காணாப் பயிர் போல
372) கண்ணினைக் காக்கும் இமை போல
373) சிலைமேல் எழுத்துப் போல

பொருத்தமான நிறுத்தக் குறி இடு 1 x 2 = 2

374) சேரர்களின் பட்டப்பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத் தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப் பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

நிற்க அதற்கு தக 7 x 3 = 21

375)

| இன்சொல் வழி | தீயசொல் வழி |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

1. இவற்றுள் நீங்கள் செல்லும் வழி யாது?
2. உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?

376) **வானொலி அறிவிப்பு**

ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**புயலின்போது**

| | |
|---|---|
| புயலின்போது வெளியே செல்ல வேண்டாம். | வெளியேற நேர்ந்தால் ஆரம்பகட்ட எச்சரிக்கையின்போதே வெளியேறவும். |
| தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். | மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப் பகுதியிலேயே தங்கவும். |
| வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றவும். | காற்று அடிப்பது நின்றாலும் எதிர்த்திசையிலிருந்து மறுபடி வேகமாக வீச ஆரம்பிக்கும். எனவே, காற்றடிப்பது முடிந்துவிட்டதாக நினைக்க வேண்டாம். |
| மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கவும். | வாகனத்தை ஓட்ட நேர்ந்தால் கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும், மின்கம்பிப் பாதைகள், நீர் வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியும் வாகனத்தின் உள்ளேயே தங்கியிருக்கவும். |

மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

377) “தம்பி... உனக்குப் பிடிச்ச காய் சொல்லு” - “கேரட்”
"பிடிச்ச பழம்" - "ஆப்பிள்"
"பிடிச்ச காலை உணவு”- “நூடுல்ஸ்”
"மத்தியானத்துக்கு" - “ஃப்ரைடு ரைஸ்"
“ராத்திரி” - “பீட்ஸா அல்லது பாஸ்தா”
இது ஏதோ ஆங்கிலப்படத்தின் வசனம் அல்ல. "சரியா சாப்பிட மாட்டேங்கிறான் டாக்டர்" என்று என்னிடம் அழைத்து வரப்பட்ட ஒரு சிறுவனுடனான என் உரையாடல் ஒட்டு மொத்த இளை தலைமுறையும் பாரம்பரிய உணவை விட்டு வேகமாக விலகிச் சென்றது எப்படி? இட்லியும் சாம்பார் சாதமும் கத்திரிக்காய்ப் பொரியலும் இனி காணாமல் போய்விடுமா? அதிர்ச்சியான பதில் ஆம் காணாமல் போய்விடும்! உங்கள் குழந்தைகள் “ஆடு மாடுகளைத் தவிர மனுஷங்க கூட கீரையைச் சாப்பிடுவாங்களா மம்மி? என எதிர்காலத்தில் கேட்கக்கூடும். மருத்துவர் கு. சிவராமனின் இக்கருத்திற்குச் சமூக அக்கறையுடனான உங்களின் பதில் என்னவாக இருக்கும்?

378) அரசின் பொங்கல் விழாவில் சிற்றூர்க் கலைகளைக் காட்சியாக்கியிருக்கிறார்கள். ஒருபுறம் திரைகட்டித் தோற்பாவைக் கூத்து நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இன்னொருபுறம் பொம்மலாட்டம் ஆடிக்கொண்டிருந்தனர். சற்று நடந்தால் தாரை தப்பட்டை முழங்க ஒயிலாட்டம் ஆடியவாறு மண்ணின் மக்கள்... இக்கலைகளை நீங்கள் நண்பர்களுடன் பார்த்தவாறும் சுவைத்தவாறும் செல்கிறீர்கள்.

**இக்கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்ய விருப்பனவற்றை வரிசைப்படுத்துக.**

379) அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்துபவை. அதுபோலவே கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம்பெற்றிருக்கும். அவை நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்கள் என்று அறிவீர்கள்தானே? இவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற செயல்கள்.

380) நாம் எப்போதும் ஒரே மனநிலையில் இருப்பதில்லை. நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம். உடன்பயில் பலருடனோ, உடன் பிறந்தவருடனோ எதிர்பாராமல் சச்சரவு ஏற்படுகிறது. இந்தச் சமயத்தில் சினம் கொள்ளத் தக்க சொற்களைப் பேசுகிறோம். கேட்கிறோம். கைகலப்பில் ஈடுபடுகிறோம்: இதுகாறும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்க வேண்டாமா? மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும்.

381) ஒவ்வொரு சூழலிலும் ஒருவருக்கொருவர் உதவி செய்தபடி இருக்கிறார்கள்; உதவி பெற்றபடியும் இருக்கிறார்கள். சில உதவிகள் அவர்கள்மீதுள்ள அன்பினால் செய்கிறோம்; சில உதவிகளை இரக்கத்தால் செய்கிறோம். தொடர்வண்டியில் பாட்டுப்பாடி வரும் ஒருவருக்கு நம்மை அறியாமல் பிச்சை போடுகிறோம். தொல்லை வேண்டா என்று கருதிச் சில இடங்களில் வேண்டா வெறுப்போடு உதவி செய்கிறோம்.
நீங்கள் பார்த்த, செய்த உதவிகளால் எய்திய மனநிலை...

**சிறுவினா** 35 x 4 = 140

382) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாய்ப் பாவலரேறு சுட்டுவன யாவை?

383) 'முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே' என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் கூறக் காரணம் யாது?

384) புளியங்கன்று ஆழமாய் நடப்பட்டுள்ளது. இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தன் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

385) தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

386) அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவையில்லை. எல்லாம் எமக்குத் தெரியும். - இக்கூற்றில் அடிக்கோடிட்ட சொற்களில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாய் மாற்றி எழுதுக.

387) உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசைகளிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான் என முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப்பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப்பற்றிப் பேசினால்... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

388) சோலைக்காற்றும் மின்விசிறிக்காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

389) மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.

390) தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த்தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி
பார்த்தாள்.
- இப்பத்தியிலுள்ள தொகைச்சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.

391) முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப்பொருள்கள் யாவை?

392) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

393) வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு
- இக்குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.

394) இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

395) மனிதர்களின் மூளையைப் போன்றது செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள். மனிதனைப் போலவே பேச, எழுத, சிந்திக்க இத்தொழில்நுட்பம் மேம்படுத்தப்படுகிறது. இதனால் மனிதகுலத்திற்கு ஏற்படுகிற நன்மைகளைப்பற்றி அறிவியல் இதழ் ஒன்றிற்கு 'எதிர்காலத் தொழில்நுட்பம்' என்ற தலைப்பில் எழுதுக.

396) 'மாளாத காதல் நோயாளன் போல்' என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

397) உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர், பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை' எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

398) மன்னன் இடைக்காடனார் என்னும் புலவருக்கு சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

399) “முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."
- இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டுக.

400) மயிலாட்டம் என்றால் என்ன? விளக்குக.

401) ‘கரகாட்டம்’ என்றால் என்ன? விளக்குக.

402) நவீனக் கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம் பூத்தொடுக்கும் நாட்டுப்புறப்பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிடுக.

403) வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாய் அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

404) 'கடற்கரையில் உப்புக்காய்ச்சுதல் நடைபெறுகிறது. மலைப்பகுதிகளில் மலைப்பயிர்களும், நிலப்பகுதிகளில் உழவுத்தொழிலும் நடைபெறுகின்றன' - காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும் பண்டைத்தமிழரின் திணைநிலைத்தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும், அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.

405) வள்ளுவர், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

406) “தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்” - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

407) முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாய்க் கு.ப.ரா. கவி பாடுகிறார்?

408) பின்வரும் பத்தியைப் படித்து மையக் கருத்தை எழுதுக.

409) அவந்தி நாட்டு மன்னன் மருதநட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டினைக் கைப்பற்ற நினைக்கிறான். அப்போர்நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின்படி விளக்குக.

410) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

411) வாளித்தண்ணீர், சாயக்குவளை, கந்தைத்துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

412) ஆசிரியப்பாவின் ‘பொது' இலக்கணம் கூறுக.

413) ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' என்னும் கதைமாந்தர் வாயிலாய் விளக்குக.

414) "சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியா" - இடஞ்சுட்டிப் பொருள் தருக.

415) எவையெல்லாம் அறியேன் என்று கருணையர் கூறுகிறார்?

416) கவிஞர் தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

**பத்தியை படித்து விடை எழுது** $9 \times 4 = 36$

417) செய்திகளைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

**பூக்களைப்பற்றிய அரிய இலக்கியச்செய்திகள்**

(i). பூ உண்டு. ஆனால், கண்ணிற்குக் காட்சி தராமல், காண்டற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள் ஆலமலர், பலாமலர்.
(ii). மலர் உண்டு; பெயரும் உண்டு; ஆனால், இதுதான் அது என்று உறுதியாய் அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள் சுள்ளி மலர், பாங்கர் மலர் ஆகும்.
அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள் அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா ஆகும்.
பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு மலருள் சில எளியவை ஆகின்றன. அவையாவன: நெருஞ்சி, எருக்கு, பூளை,
குரீப்பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை.
இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்திலேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப்பூ, குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும். மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒரு வகை அரிசி தோன்றும். அது மூங்கில் அரிசி எனப்படும்.

1. மலர் உண்டு, பெயரும் உண்டு - இருதொடர்களையும் ஒருதொடராக்குக.
2. அரும்பாகி, மொட்டாகி, பூவாகி ... என்பதை ஒத்து அமைந்துள்ள தொடரைக் கண்டறிக.
3. நீங்கள் அறிந்த இரு பூக்களின் பெயர்களையும் பயன்களையும் எழுதுக.
4. அரிய மலர் - இலக்கணக்குறிப்புத் தருக.
5. தொடரில் பொருந்தாப் பொருள் தரும் மயங்கொலி எழுத்துகளைத் திருத்துக.

418) **பழையசோறு**

பச்சை நெல் வயலைக் கண்கள் முழுதும் சுமந்து இளநெல்லை நுகர்ந்து, அதன் பாலை ருசித்து, நீராவியில் அந்த நெல் அவியும் கதகதப்பான புழுங்கல் மணம் வரை சுவைத்தவள் நான். அவித்து, காய்ந்து குத்திய அந்தப் புழுங்கல் அரிசியை, அதன் கடுப்பு மணத்தை சோறாகு முன் கை நிறைய அள்ளி வாயில் போட்டு நெரித்து மென்றவள் சொல்கிறேன். பகலெல்லாம் உச்சி வெயிலுக்கு அது சுடச்சுடப் புழுங்கலரிசிச் சோறு இரவு முழுவதும் அந்தச் சோறு நீரில் ஊறும். விடிந்த இந்தக் காலையில் அதன் பெயர் பழைய சோறு அல்லது பழையது காத்திருந்து, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் கடித்து நீராகாரம் போல் குடிப்பது ஒரு வகை. வாழை இலையில் அந்தப் பழையச் சோற்றைப் பிழிந்து போட்டால், வடுமாங்காய் அல்லது உப்பு நார்த்தங்காய் அதனுடன் சேர்த்துக் கொள்ளத் துடிப்பது இன்னொரு வகை. சுண்ட வைத்த முதல் நாள் குழம்பு இன்னும் உச்சம்! நல்ல பழையது மாம்பழம் வாசம் வீசுமாம். பழைய சோறு அது கிராமத்து உன்னதம்.

“கைக்கடல் முத்துக்கு ஈடாய் மிக்க நெல்முத்து” - முக்கூடற்பள்ளு

419) **கதையாக்குக.**

மனித வாழ்வில் ஒவ்வொரு நாளும் புதுப்புது மனிதர்களைப் பார்க்கிறோம்; புதுப்புதுச் செய்திகள் கிட்டும்! கிட்டுகிற கருப்பொருளைத் திரட்டி, கற்பனை நயம் கதையாக்குவது ஒரு கலை, அது சிறுகதையாக இருக்கலாம். புதினமாக இருக்கலாம். அன்பை எதிர்பார்த்திருப்பவராக, யாருமற்றவராக..... இருக்கும் ஒருவர் உங்களின் உதவியால் மனம் மகிழ்ந்த நிகழ்வினைக் கதையாக்குக.

420) பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவான போது நெருப்புப்பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி, வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து, செறிந்து திரண்டு (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலை பெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

**வினாக்கள்**

1) பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எழுதுக.
2) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
3) பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகை யாக மாற்றுக
4) இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது
5) உயிரிகள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாய் நீவிர் கருதுவது யாவை?

421) **தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.**

(சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து)

1. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் ________
2. விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை __________
3. கல், சிலை ஆகுமெனில், நெல் ___________ ஆகும்.
4. குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து ___________-
5. மீன் இருப்பது நீரில்; தேன் இருப்பது ___________


422) **குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக.**

1. மீளாத் துயர்
2. கொடுத்துச் சிவந்த
3. மறைத்துக் காட்டு
4. அருகில் அமர்க
5. பார்த்தபடம்
6. எழுதாக்கவிதை

423) புதிர்ப்பாடலைப் படித்து விடையைக் கண்டுபிடிக்க.
தார்போன்ற நிறமுண்டு, கரியுமில்லை
பார்முழுதும் பறந்து திரிவேன், 'மேகமுமில்லை.
சேர்ந்து அமர்ந்து ஒலிப்பேன், பள்ளியுமில்லை"
சோர்ந்து போகாமல் வீடமைப்பேன், பொறியாளருமில்லை.
வீட்டுக்கு வருமுன்னே, வருவதைக் கூறுவேன் - நான் யார்?

424) புதிர்ப்பாடலைப் படித்து விடையைக் கண்டுபிடிக்க.
தார் போன்ற நிறமுண்டு கரியுமில்லை
பார் முழுவதும் பறந்து திரிவேன் மேகமுமில்லை
சேர்ந்து அமர்ந்து ஒலிப்பேன் பள்ளியுமில்லை
சோர்ந்து போகாமல் வீடமைப்பேன் பொறியாளருமில்லை
வீட்டுக்கு வருமுன்னே வருவதைக் கூறுவேன். **- நான் யார்?**

425) படம் தரும் செய்தியைப் பத்தியாகத் தருக.



**கடிதம்** 6 x 5 = 30

426) மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக

427) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

428) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

429) உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுதடைந்து உள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

430) பள்ளி வளாகத்தில் நடைபெற்ற மரம் நடுவிழாவுக்கு வந்திருந்த சிறப்பு விருந்தினருக்கும் பெற்றோருக்கும் பள்ளியின் 'பசுமைப் பாதுகாப்புப் படை' சார்பாக நன்றியுரை எழுதுக.

431) "பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்" - குறித்த செயல்திட்ட வரைவு முறை ஒன்றை உருவாக்கித் தலைமை ஆசிரியரின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுததுக.

கட்டுரை 5 x 5 = 25

432) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.
இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

433) பாரதியின் வசனநடை - சிட்டுக்குருவி
சிறுதானியம் போன்ற மூக்கு, சின்னக்கண்கள், சின்னத்தலை, வெள்ளைக் கழுத்து, அழகிய மங்கா வெண்மை நிறமுடைய பட்டுப் போர்த்த வயிறு, கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் "நிறத்தாலாகிய பட்டுப்போர்த்த முதுகு, சிறிய தோகை, துளித்துளிக் கால்கள். இத்தனையையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்துவிடலாம். இவ்விதமான உடலைச் சுமந்துகொண்டு என் வீட்டிலே இருஉயிர்கள் வாழ்கின்றன. அவற்றுள் ஒன்று, ஆண்; மற்றொன்று, பெண்.
இது போன்று உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒன்றைப்பற்றி வசன நடையில் எழுதுக.

434) விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்

435) பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை /கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

436) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

நயம் பாராட்டு 4 x 5 = 20


437) தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே
-கா. நமச்சிவாயர்

438) “கத்துகடல் சூழ்நாகைக் காத்தான் தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசிவரும் -குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓர்அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்"
- காளமேகப் புலவர்.

439) நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஒட்டி மகிழ்ந்திடுவோம்
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ?
-பாரதியார்

440) பா நயம் பாராட்டல்
கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்தே
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சு வைத்தண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில் உறும் பயனே
ஆடையிலே எனை மணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந்தருளே - வள்ளலார்


காட்சியில் கண்டு கவினுற எழுது 9 x 5 = 45


441) 


442) 

443) 

444) 

445) 

446) 

447) 

448) 

449) 

**வாழ்த்துரை வரைக** 1 x 5 = 5

450) உம் பள்ளியில் நடைபெறும் நாட்டு நலப்பணித்திட்ட முகாமின் தொடக்கவிழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்குக.

**நெடுவினா** 20 x 6 = 120

451) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலையும், பெருஞ்சித்திரனாரின் தமிழ்வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

452) தமிழின் சொல்வளம்பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கு உரைக்குறிப்புகளை எழுதுக.

453) ஒரு பக்க அளவில் எழுதுக.
(சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினர் மகளுக்குத் தமிழ்மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப்பற்றி உரையாடுக.)

454) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

455) 'புயலிலே ஒரு தோணி' என்னும் கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத் தொடர்களும், ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

456) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினர்களுக்குச் செய்த விருந்தோம்பலை விவரித்து எழுதுக.

457) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாய் இருந்தது. அஃது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாய் மாறியிருப்பதை விளக்குக.

458) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செய்லுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதியைக்கொண்டு விவரிக்க.

459) ஒரு குழந்தையைத் தூக்கவும், கீழே விழுந்த ஒரு தேநீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

460) "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப்பயணம்" என்ற தலைப்பில் கற்பனைக் கதை ஒன்றை எழுதுக.

461) தமிழின் இலக்கியவளம் - கல்விமொழி - பிற மொழியில் உள்ள இலக்கிய வளங்கள் அறிவியல் கருத்துகள் - பிற துறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை. மேற்கண்ட குறிப்புகளைக்கொண்டு "செம்மொழித்தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை" என்னும் தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

462) இறைவன், புலவர் இடைக்காடர் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வினை நயத்துடன் எழுதுக.

463) "கற்கை நன்றே கற்கை நன்றே.
பிச்சை புகினும் கற்கை நன்றே"
என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப்பற்றிய உங்கள் கருத்துகளை விவரிக்க.

464) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக்கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப்பருவமும் நாட்டுப்பற்றும்' என்னும் தலைப்பில் மேடை உரை எழுதுக.

465) பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்தியின் பாடல் நயத்தை விளக்குக.

466) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

467) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும், அதற்குப் பாராட்டுப் பெற்றதையும்பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

468) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

469) கருணையர் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரி.

470) அழகிரிசாமியின் ‘ஒருவன் இருக்கிறான்' என்னும் சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் ‘கதைமாந்தர்’ குறித்து எழுதுக.

****************************************